# 7 விரதங்களும் பண்டிகைகளும்

சைவ மக்களால் பின்பற்றப்படுகின்ற சமய ஒழுகலாறுகளில் விரதங்கள், பண்டிகைகள் என்பனவும் அடங்கும். அவை எமது வாழ்வில் இறையுணர்வையும் புனிதத் தன்மையையும் ஏற்படுத்த உதவுகின்றன. நாம் அனுட்டிக்கும் விரதங்கள், கொண்டாடும் பண்டிகைகள் விளக்கம், நாம் சைவ பாரம்பரியங்களைப் பேணி, வாழ்வில் கடைப்பிடிப்பதற்கு உதவியாக அமையும் அவ்வகையில் விரதங்கள், பண்டிகைகள் பற்றி நாம் கற்போம்.

## (அ) விரதங்கள்

'விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்' என நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார். விரதம் என்பது ஒரு வகை விசேட வழிபாடாகும். விரதம், நோன்பு என்பன ஒரே கருத்தைத் தரும் சொற்களாகும்.'

விரதங்களை வெள்ளிக்கிழமை விரதம், செவ்வாய்க்கிழமை விரதம் எனவும் சிவவிரதம், சக்தி விரதம், விநாயகர் விரதம், முருக விரதம், வைரவ விரதம், விஷ்ணு விரதம் எனவும் பாகுபடுத்துவர். பொதுவாக, விரதங்களை அனுட்டிக்கும்போது பின்பற்ற வேண்டிய செயல்கள் பல உள்ளன. அதிகாலையில் நித்திரை விட்டெழுதல், புறத்தூய்மை அகத்தூய்மை பேணுதல், தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல், ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் வழிபடுதல், அர்ச்சனை செய்வித்தல், திருமுறை பாடுதல், உணவைச் சுருக்குதல், பகிர்ந்துண்ணல் என்பவற்றை விரத காலங்களில் செய்தல் உத்தமமாகும். விரத நாட்களில் முடிந்தவரை தான தருமங்கள் செய்தல், உணவளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

விரதங்களை அனுட்டிப்பதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன. விரதங்கள், நமக்கு நல்லறிவைத் தருகின்றன. அவற்றை அனுட்டிப்பதால் கடவுள் மீது பக்தியை ஏற்படுத்துகின்றன. எம்மை பொறுமை, புலக்கட்டுப்பாடு உள்ளவர்களாகவும், மன வலிமை உடையவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் அவை மாற்றுகின்றன. அவ்வகையில் விரதங்கள் மனிதரை நல்வழிப்படுத்துவதில் முக்கிய பங்கெடுக்கின்றன. எனவே, நீங்களும் விரதம் அனுட்டித்து, இறையருளையும் நற்பயன்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

## (ஆ) பண்டிகைகள்

சமயம் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படும் விசேட தினங்கள் பண்டிகைகள் எனப்படும். பண்டிகை என்ற சொல் பெருநாள், விசேடநாள் என்னும் பொருளைத் தரும். பண்டிகையானது இறை உணர்வை வளர்க்கவும் குடும்பத்தாருடன் சந்தோஷமாக இருக்கவும் ஒற்றுமை, மகிழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்தவும் காரணமாக உள்ளது.

வழக்கமான உணவிலும் பார்க்க. சிறப்பான சுவையான உணவு வகைகளைச் சிறுவர்கள், பெரியர்கள், அயலவர்கள், நண்பர்கள் முதலானோர் சேர்ந்து உண்ணும் விருந்து வைபவமாக பண்டிகைகள் விளங்குகின்றன. புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், வாழ்த்து மடல்கள் அனுப்புதல் முதலான குதூகலச் செயற்பாடுகளும் பண்டிகைகளின்போது இடம்பெறுகின்றன.





பண்டிகைகளில் தைப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன குறிப்பிடத்தக் கன, இவற்றுள், சித்திரை வருடப்பிறப்பு சித்திரை மாதப் பிறப்பன்று கொண்டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து, பஞ்சாங்கம் குறிப்பிடும் புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து நீராடுவர், பின்னர், புத்தாடை அணிவர், சூரியனுக்குப் பொங்கல் செய்து வழிபடுவர். அவற்றைத் தவிர, ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல், பெரியவர்-களைப் பணிந்து வணங்குதல். அவர்களிடம் கைவிசேடம் பெறுதல் போன்ற கருமங்களும், உணவு வகைகளைப் பகிர்ந்துண்ணல் என்பனவும் சித்திரை வருடப்பிறப்பன்று இடம்பெறும் நிகழ்வுகளாகும்.

சித்திரை வருடப்பிறப்பன்று சில கிராமங்களில் பாரம்பரியக்கலை நிகழ்வுகளும் நடைபெறுவதுண்டு. நல்ல சுபவேளையில் நாட்காரியங்கள் செய்து, தொழிலை ஆரம்பிப்பதும், உறவினர் வீடுகளுக்கு விருந்துக்குச் செல்வதும் இடம்பெறும்

சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும் நிகழ்வுகளில் சித்திரைப் (சித்திரா) பௌர்ணமியும் ஒன்றாகும். இது தமிழர்களுக்குரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளா-கும். பண்டைக்காலத்தில், தமிழகத்தில், பூம்புகாரில், இதே நாளில் இந்திர விழா நடைபெற்றது. இதனை, வசந்த விழா எனவும் அழைப்பர். இலங்கையிலுள்ள சைவ மக்கள் இதே நாளில் சித்திரகுப்த விரதத்தை அனுட்டித்து. சித்திரபுத்திரனார் கதை படித்து, கஞ்சி சமைத்து வழங்குவர். அது சித்திரைக் கஞ்சி எனப்படும். மேலும், சிவபதமடைந்த தாயின் பொருட்டு, பிள்ளைகள் சித்திரைப் பௌர்ணமி நாளில் விரதம் அனுட்டிப்பர்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. விரதம் என்றால் என்ன?
2. உங்களுக்குத் தெரிந்த மூன்று விரதங்களின் பெயர்களைத் தருக ?
3. பண்டிகை என்றால் என்ன?
4. சித்திரை வருடப்பிறப்பு கொண்டாடும்போது, செய்யப்படும் செயல்களை ஒழுங்கு முறையில் தருக.

**02. பின்வரும் விடயங்கள் சரியாயின் " ✔ " எனவும் பிழையாயின் " X " எனவும் அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.**

1. விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதமும் ஒன்றாகும். ( )
2. உணவை விடுத்து, இறைவனை வழிபடுவது பண்டிகையாகும். ( )
3. பண்டிகை நிகழ்வின் போது புத்தாடை அணிவர். ( )
4. தைப்பொங்கலின் போது மருத்து நீர் வைத்து நீராடுவர். ( )

## செயற்பாடு

1. பத்திரிகைகளில் வெளிவரும் பண்டிகைகள், விரதங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய விரதங்களை ஆசிரியரின் உதவியுடன் தொகுத்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- விரதம், பண்டிகை என்பன எமது சமய ஒழுகலாறுகள் ஆகும்.
- விரதங்களை அனுட்டிக்கும் போது உரிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- விரதங்கள், பண்டிகைகள் என்பன பல நன்மைகளை எமக்குத் தருகின்றன.